PSC/DIS/01/08/2020-03-09

2023.05.03

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
அனைத்து திணைக்களத் தலைவர்கள்
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழு
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுகாதார சேவைக் குழு

**இலஞ்சக் குற்றங்கள் தொடர்பில் அரச அலுவலர்களுக்கு எதிராக நடாத்தப்படும் ஆரம்பப் புலனாய்வு மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளின் போது இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களை சாட்சியமளிக்க அழைத்தல்**

இலஞ்சம் பெற்றுக் கொள்ளல் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரச அலுவலர்கள் தொடர்பில் நடாத்தப்படும் ஆரம்பப் புலனாய்வு மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளின் போது அத்தியாவசியமான எழுத்துமூல மற்றும் வாய்மூல சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமற் போகின்றமை காரணமாக அவ்வாறான அரச அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்கையில் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் குறித்து அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

02. அதற்கமைய, இலஞ்சக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அரச அலுவலர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், குறித்த அரச அலுவலர்கள் தொடர்பில் நடாத்தப்படும் ஆரம்பப் புலனாய்வு மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளுக்குத் தோற்றி சாட்சியமளிப்பதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ளது என்பது குறித்து அவ் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகத்தின் BC/SEC/07/2022-II ஆம் இலக்க மற்றும் 2022.10.07 ஆம் திகதிய மற்றும் 2023.02.14 ஆம் திகதிய கடிதங்கள் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

03. மேலும், இலஞ்சக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் எவரேனுமொரு அரச அலுவலருக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், மேற்குறித்தவாறு குறித்த அரச அலுவலர் தொடர்பில் நடாத்தப்படும் ஆரம்பப் புலனாய்வு மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களை சாட்சியமளிக்க அழைத்தல் தொடர்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை, ஏற்புடைய நிறுவனத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழு ஊடாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

04. அதற்கமைய, இலஞ்சக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அரச அலுவலர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், பின்வருமாறு செயற்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமையத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

அ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுக்காற்று அதிகாரத்திற்கு உட்படும் அரச அலுவலர்கள் தொடர்பில் நடாத்தப்படும் ஆரம்பப் புலனாய்வு மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களின் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்வதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகளை, ஏற்புடைய நிறுவனத்தினால் நிருவாக அதிகாரி மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு ஊடாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ஆ) அரச அலுவலர்களின் ஒழுக்கக் கட்டுப்பாடு பற்றிய அதிகாரங்களை நடைமுறைப்படுத்துகையில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஏதேனுமொரு குழுவிற்கு அல்லது அமைச்சு செயலாளர் அல்லது திணைக்களத் தலைவர் அல்லது அரச அலுவலர்களுக்கு ஒழுக்காற்று அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், அந்தந்த உத்தியோகத்தர் வகுதிகளின் அலுவலர்கள் தொடர்பில் நடாத்தப்படும் ஆரம்பப் புலனாய்வு மற்றும் முறைமைசார் ஒழுக்காற்று விசாரணைகளுக்கு இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்களை சாட்சியமளிக்க அழைத்தல் தொடர்பில் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை, ஏற்புடைய நிறுவனத்தினால் நிருவாக அதிகாரி, ஒழுக்காற்று அதிகாரி மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு ஊடாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

05. அதற்கமைய, மேற்குறித்தவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

தனுஜா முருகேசன்
பதில் செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு

பிரதி :

பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, தங்களது BC/SEC/07/2022-II ஆம் இலக்க மற்றும் 2022.10.07 ஆம் திகதிய மற்றும் 2023.02.14 ஆம் திகதிய கடிதங்களுக்கமைய, த.க.

2023/05/11